பண்ருட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் ஊரகக் கிட்டங்கி நுழைவு வாயில் முன்பக்கம், வடக்கு மற்றும் தெற்கு பக்கங்களிலிருந்த மண் சாலைகள் சிமென்ட் மற்றும் கான்கிரீட் சாலைகளாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மேலும், விற்பனைக் கூடத்தின் பரிவர்த்தனைக் கூடம் எண் 2–இல் பழுதடைந்துள்ள தரைப் பகுதி சரி செய்யப்பட்டு, இதர மராமத்துப் பணிகளும் இவ்விற்பனைக் கூடத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவக்கொழுந்து அவர்கள் இருக்கையில் இல்லை. மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் துணைக் கேள்வி கேட்கத் தயாராக இல்லை.*

வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

39—

சத்துணவு மையம்

***2215—திரு. எஸ்.பி. முத்துக்குமரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புத்தாம்பூர் இராயவயல் தொடக்கப் பள்ளியில் புதியதாக சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புத்தாம்பூர் இராயவயல் கிராமத் தொடக்கப் பள்ளியில் 24–8–2011 முதல் சத்துணவு மையம் துவக்கப்பட்டு, 32 மாணவ,

2012 பிப்ரவரி 4]

மாணவிகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றப் பேரவைத் தொகுதி, புத்தாம்பூர் ஊராட்சிக்கு உட்பட்டிருக்கக்கூடிய இராயவயல் கிராமத்தில் சத்துணவுத் தொடக்கப் பள்ளி இருந்தும், சத்துணவு மையம் செயல்படாமல் இருந்ததை நம்முடைய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவந்து, இப்போது இந்தக் கோரிக்கையைச் சிறப்பான முறையிலே நிறைவேற்றித் தந்திருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதிவாழ் மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதோடு, மையங்களின் எண்ணிக்கை குறைவு என்பதால், அந்த சத்துணவு மையங்களினுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தாமல் வெவ்வேறு இடங்களோடு இணைத்து சத்துணவு வழங்கப்படுவதால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. குறிப்பாக கடந்த சில தினங்களுக்கு முன்புகூட கும்பகோணம் நகராட்சிக்குட்பட்டு இருக்கக்கூடிய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பயின்ற தொடக்கப் பள்ளியில்கூட சத்துணவு மையம் தனியாக இயங்கவில்லை என்கிற செய்திகூட வருகிறது. எனவே, அப்படி சில பிரத்தியேகமாக இருக்கக்கூடிய பள்ளிகளை, அதுவும் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் பயின்றிருக்கக்கூடிய அதுபோன்ற பள்ளிகளிலாவது எண்ணிக்கையைக் கணக்கிடாமல், அங்கே சத்துணவு மையம் செயல்படுவதற்கு அரசு சிறப்பு அனுமதி வழங்கி செயல்படுத்திட வேண்டும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்கள் எங்கேயும் தொடங்கப்பட்டு செயல்படவில்லை என்பது தவறான தகவல். 25 மாணவ, மாணவிகள் சத்துணவு உண்ண விருப்பப்பட்டால்கூட, அந்தப் பகுதியில் சத்துணவு மையங்கள் உடனடியாகத் தொடங்கப்பட்டு, அங்கேயே சமைக்கப்பட்ட உணவுகள் வழங்கப்படுகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இச்சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையொட்டிய ஒரே ஒரு துணை வினா. தற்பொழுது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய சத்துணவுப் பணியாளர்களுக்கான காலிப் பணியிடங்களை நிரப்புவதைப் பொறுத்தவரையில் எப்பொழுது அந்தப் பணிகள் விரைந்து செயல்படுத்தப்படும் என்பதனைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் சத்துணவு மையம் அமைப்பது குறித்து கேட்டுவிட்டு, பிறகு காலிப் பணியிடங்களைப் பற்றிக் கேட்கிறீர்கள். அதற்கெல்லாம் தனிக் கேள்வி கேளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

முற்பகல் 10—05

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதிக்குட்பட்ட அரூர் ஒன்றியம், காரப்பாடி தொடக்கப் பள்ளியில், பள்ளி தொடங்கி, ஏறக்குறைய 2 ஆண்டுக் காலமாக சத்துணவு மையம் இல்லாமல் சத்துணவு வழங்கப்படாமல் இருக்கிறது. அதேபோல, வேலூர் மாவட்டத்தில் உறுதிமொழிக் குழுவினர் ஆய்வு செய்யும்போது 96 மையங்களில் சத்துணவு வேறு இடங்களிலிருந்து சமைத்துக் கொண்டுவந்து வழங்கப்படுவதாக மாவட்ட ஆட்சியரே தெரிவித்தார். 11 மாதங்களாக சத்துணவு மையங்களே இல்லாமல் இருக்கிறது. ஆக, அங்கே சத்துணவு மையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகின்றேன்.*

2012 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்ன தகவல், குறிப்பாக அந்த இடம் எந்தப் பகுதியில் இருக்கிறது என்று எழுதிக் கொடுத்தால் இந்த அரசு சிந்தித்து, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள், குறிப்பாக தமிழ்வழிக் கல்வி நடத்தக்கூடிய சிறுபான்மையினர் பள்ளிகளில் சத்துணவு கொடுப்பதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா? குறிப்பாக, சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் பகுதியில் பகஞ்சான் என்ற கிராமத்தில் கிறிஸ்தவ அமைப்பின் சார்பில் ஒரு பின்தங்கிய பகுதியில் தமிழ்வழிக் கல்வியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பள்ளியில் படிக்கின்ற குழந்தைகளுக்கு சத்துணவு கிடைக்காத ஒரு நிலை நீடித்துக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், சத்துணவு கொடுக்க மறுக்கப்படுகிறது. எனவே, அப்படிப்பட்ட பள்ளிகளுக்கும் சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் குணசேகரன், it is a policy decision. திடீரென்று உதவிபெறும் பள்ளிகளைப் பற்றிக் கேள்வி கேட்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அதற்கான பதில் இருக்காது. நீங்கள் மூல வினாவை ஒட்டி கேள்வியைக் கேளுங்கள், நான் அனுமதியளிக்கிறேன். அவரை ஏன் embarrass செய்கிறீர்கள்? மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி என எந்தப் பள்ளியாக இருந்தாலும், அதற்குத் தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, 25 மாணவ, மாணவிகள் சத்துணவு உண்ண விருப்பம்

தெரிவித்துள்ளனர் என்ற அந்த நிலையைத் தெரிவித்தால், அங்கு உடனடியாக சத்துணவு மையத்தை அமைக்கும் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதுபோல கடலூர் மாவட்டத்தைத் 'தானே' புயலிடமிருந்து கட்டிக் காத்து, 'தானே' புயலே வெட்கப்படுகின்ற அளவுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். கடலூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், காட்டுமன்னார்கோவில் தொகுதி மக்களின் சார்பாகவும் என்னுடைய பணிவான நன்றியினைத் தெரிவித்து, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில், பழஞ்சநல்லூர் ஊராட்சியில் உள்ள பட்டிக்கொல்லை தொடக்கப் பள்ளிக்குப் புதியதாக சத்துணவு மையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி, பட்டிக்கொல்லை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் எத்தனை மாணவ, மாணவியர் சத்துணவு சாப்பிட விருப்பம் தெரிவித்துள்ளனர் என்ற விவரத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்தால், அங்கு 25 மாணவ, மாணவியருக்குக் குறையாமல் இருந்தால் உடனடியாக சத்துணவு மையம் ஆரம்பிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நல்லமுறையில் அதை நடத்தித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*